


திருப்பூர் கிழக்கு மாவட்டம், காங்கயம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வெள்ளகோவில் நகரத்தில் கழக தகவல் தொழில்நுட்ப அணி WAR ROOM ஐ திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் சுரேஷ் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் திறந்து வைத்தார். இதில் மாவட்ட, ஒன்றிய, நகர தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள், ஒன்றிய, நகர கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர் பலர் கலந்து கொண்டனர்.




ஈரோடு மாவட்ட அரசு தலைமை பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையின் பயன்பாட்டிற்கு ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் 2024 – 2025 ஆம் ஆண்டு தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.40 லட்சம் மதிப்பீட்டில் மருத்துவ உபகரணங்களை வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி, ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், துணை மேயர் வி.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், இணை இயக்குனர் (நலப்பணிகள்) மரு. சாந்தகுமாரி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### முறையற்ற வகையில் திருத்தங்கள் செய்து, பா.ஜ.க. வெற்றி பெற்றுள்ளது!

### தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் திருத்தம் நடைபெற்றால்

# சட்டரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் சந்திக்க நாங்கள் தயாராக இருக்கிறோம்!

## சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேட்டி!

**சென்னை, ஆக. 15- சென்னை அண்ணா அறிவாலயத்தில் திராவிட முன்னேற்றக் கழகச் சட்டத்துறை செயலாளர் என்.ஆர். இளங்கோ அவர்கள் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:**

தேர்தல் ஆணையத்திடம் 5 கோரிக்கைகள் அடங்கிய ஒரு மனுவினை தந்திருக்கிறோம். அந்த கோரிக்கைகளில் முதலாவதாக, 01.05.2025 தேதியிட்ட தேர்தல் ஆணையத்தினுடைய அறிவிப்பு பிரகாரம் இறந்த வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்க வேண்டும் என்ற கோரிக்கையும்;

இரண்டாவதாக, தேர்தல் ஆணையத்தின் நிறைய கையேடு புத்தகங்கள் உள்ளன. அந்த கையேடுகள் எல்லாம் தேர்தல் ஆணையத்தினுடைய இணையத்தளத்தில் ஆங்கிலம் மற்றும் ஹிந்தியில் மட்டுமே உள்ளது. அவற்றை தமிழ் மற்றும் அனைத்து இந்திய மொழிகளில் தர வேண்டும் என்ற கோரிக்கையையும்;

மூன்றவதாக, தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள பாக நிலை அலுவலர்கள், அரசியல் கட்சிகளால் நியமிக்கப்படக்கூடிய பாக நிலை முகவர்களையும் இணைந்து செயலாற்றும் நடைமுறைகளை வகுத்து தர வேண்டும் என்ற கோரிக்கையையும்;

நான்காவதாக, வாக்குபதிவில் ஏற்படுத்தப்பட்டு இருக்கக்கூடிய சில திருத்தங்கள் முறையற்றது. அந்த முறையற்ற சில திருத்தங்களை நீக்க வேண்டும் என்ற கோரிக்கையையும்;

ஐந்தாவதாக, எப்படி பீகாரில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் நடைபெறுகிறதோ? அதைபோல் தமிழகத்திலும் நடக்க இருப்பதால், இங்கே ஆதார் எண்ணையும், குடும்ப அட்டையும் ஒரு வாக்காளருடைய அடையாளங்களாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையையும் கேட்டு இருக்கிறோம்.

இந்த ஐந்தாவதாக உள்ளதைத் தவிர, மற்ற நான்கையும் உடனே பரிசீலித்து ஆவண செய்வதாக தேர்தல் ஆணையம் சொன்னது. ஆனால் இதுவரையில் அந்த வழியில் எந்த ஒரு நடவடிக்கையையும் தேர்தல் ஆணையம் எடுக்கவில்லை.

எனவே இவற்றையெல்லாம் வலியுறுத்தி இன்று நடந்த மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் அதற்கு உரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது.

பீகார் மாநிலத்தில் நடக்கக்கூடிய வாக்காளர் பட்டியல் திருத்தம் எவ்வளவு மோசமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது என நாடே பார்த்து கொண்டு இருக்கிறது. ஏறக்குறைய 65 லட்சம் வாக்காளர்கள் வாக்குரிமையை இழந்து நிற்கிறார்கள். அதற்கு உரிய விளக்கத்தை தேர்தல் ஆணையம் தர மறுக்கிறது. இந்தியா கூட்டணியின் ஒரு முக்கிய அங்கமாக விளங்க கூடிய திமுக, இந்த தேர்தல் ஆணையத்தின் செயலை எதிர்க்கும். எதிர்த்து போராடும்.

எனினும் கூட தமிழ்நாட்டில் அப்படி ஒரு சிறப்பு திருத்தம் நடைபெற்றால், சட்டரீதியாகவும் அரசியல்ரீதியாகவும் களத்தில் நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே இங்கே அதுபோன்ற எந்த வாக்குகளையும் நீக்காமல் பார்த்து கொள்ள வேண்டியது திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய கடமை என்று நினைக்கிறோம். அதை செய்வதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். தமிழகத்திலும் வாக்காளர் பட்டியலில் குளறுபடி செய்வதற்கு வாய்ப்பு இருக்கின்றது.



**- என்ன மாதிரியான குளறுபடி எல்லாம் வர வாய்ப்பு இருக்கின்றது. அவர்கள் என்ன மாதிரி டேமேஜ்ஜை பண்ணாங்கன்னு திமுக நினைக்கறீங்க? -**

அதாவது அந்தச் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தம் இருக்கின்றது அல்லவா, அதில் என்ன முக்கியம் என்றால், முதலில் ஒவ்வொரு வாக்காளரும் ஒரு படிவத்தை நிரப்பித் தர வேண்டும். அப்போதுதான் அவர் வாக்காளர் ஆக முடியும். இரண்டாவது, உங்களுடைய பெயர் 2003 வாக்காளர் பட்டியலில் இருந்தது என்றால், நீங்கள் வெறும் படிவத்தை மட்டும் பூர்த்தி செய்து தந்தால் போதும். அவருடைய குடும்பத்தினர் அந்த வாக்காளர் பட்டியலுடைய நகலை எடுத்து படிவத்தை நிரப்பி தந்தால் போதும். அப்படி இல்லாதவர்கள் அனைவரும் இருப்பிட சான்றிதழையும் பிறப்பு சான்றிதழையும் தர வேண்டும். இந்தச் சான்றிதழ்கள் எத்தனை மக்களிடம் இருக்கும்? எத்தனை சாதாரண மக்களிடம் இருக்கும்? அடித்தட்டு மக்களிடம் இருக்கும்? இதுதான் மிகப்பெரிய கேள்வி.

ஒன்றிரண்டு இறந்த வாக்காளர்களை நீக்குவது, இரட்டை பதிவு கொண்ட வாக்காளர்களை நீக்குவது. இடம்பெயர்ந்த வாக்காளர்களை நீக்குவது என்பது நான் ஏற்கனவே சொன்ன மாதிரி, பாகநிலை அலுவலர். அதாவது பிஎல்ஓ என்று சொல்லக்கூடிய அந்த அலுவலர்தான் போய் வீடு வீடாகப் பார்க்க போகிறார். அவர்கள் முறையாக அந்தப் பணியை செய்யவில்லை என்பதுதான் இந்தியா கூட்டணியுடைய மிகப்பெரிய புகார். வீடு வீடாக சென்று யார் யார் இறந்திருக்கிறார்கள், யார் யார் இரட்டை பதிவு வாக்கு வைத்திருக்கிறார்கள் என்ற கணக்கீடை ஒழுங்காக எடுப்பதில்லை. எனவேதான் இத்தனை லட்சம் வாக்காளர்கள் நீக்கப்பட்ட நிலையில் இருக்கிறார்.

இந்தப் பணி தமிழ்நாட்டில் நடக்கும்போது இது போன்ற முறைகேடுகள் நடக்கக்கூடாது. வீடு வீடாக சென்று பார்ப்பது என்றால், பாகநிலை அலுவலர் உண்மையிலேயே வீடு வீடாகச் செல்ல வேண்டும். அதற்கான கணக்கீடுகளை எடுக்க வேண்டும். கணக்கீடுகளை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளுடைய பாகநிலை முகவர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். அவர்களுடன் ஆலோசனை நடத்த வேண்டும். இவையெல்லாம் நாங்க சொல்லவில்லை. இவையெல்லாம் தேர்தல் ஆணயத்தினுடைய கையேடுகளில் இருக்கிறது.

இந்த வழிமுறைகளை சரியாக பின்பற்ற வேண்டும். அப்படி பின்பற்றாமல் நடந்தது தான் பீகார் வாக்காளர் திருத்த பட்டியல். அதுபோன்று தமிழகத்தில் நடந்துவிடக்கூடாது. நடக்கக்கூடாது என்பதுதான் எங்களுடைய கோரிக்கை.

**- இப்ப பீகார்ல எலக்சன்ஸுக்கு இன்னும் த்ரீ மன்த்ஸ் தான் இருக்கு. இப்ப கடைசி நேரத்துல பண்ணாங்க. இப்ப கண்டிப்பாக தமிழ்நாட்டுல பண்ண போறோம்னு சொல்றாங்க. ஆனால் அது முன் கூட்டியே பண்ண சொல்லி நீங்க எதுவும் கேட்டுருக்கீங்களா? -**

நிச்சயமாக... நாங்கள் கேட்டிருக்கின்றோம். தலைவருடைய வழிகாட்டுதலில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் ஆணயத்தைச் சந்தித்தபோது நாங்கள் குறிப்பாக இதைத்தான் கேட்டோம். பீகாரில் இருக்கக்கூடிய 7 கோடி 34 லட்சம் வாக்காளர்களும் வெறும் 30 நாட்களில் நான் குறிப்பிட்ட அந்த எனுமரேஷன் ஃபார்மை பூர்த்தி செய்து தர வேண்டும் என்றனர். இது சாத்தியமற்றது.

அதே போன்று தமிழகத்தில் நடத்த என்றால், இங்கே இருக்கக்கூடிய 6 கோடி 34 லட்சம் வாக்காளர்களுக்கு ஒரு மாதம் கொடுத்தால் போதாது. அவர்கள் உரிய ஆவணங்களை பெறுவதற்கும் படிவங்களை பூர்த்தி செய்வதற்கும் குறைந்தபட்சம் இரண்டு மாதங்கள் அவகாசம் வேண்டும் என்று கேட்போம்.

**- இவ்வளவு முறைகேடுகள் நடந்தால் தேர்தல் மீது நாளைக்கு நம்பிக்கை கேள்விக்குறியாகிவிடதா? 2026 தேர்தலை தேர்தல் ஆணையம் தமிழகத்துல நியாயமா நடத்தணும்னு நீங்க எதிர்பார்க்கிறீங்களா?**

அது உண்மையிலேயே சந்தேகத்திற்குரியதுதான். ஆனால் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அடிமட்ட தொண்டர்களில் இருந்து தலைமைக்கழகம் வரை இதில் உறுதியாகக் களத்திலிருந்து போராடுவதால் அந்த முறைகேடுகளை அனுமதிக்க மாட்டோம்.

- *தேர்தல் ஆணையத்தில் உச்சநீதிமன்றம் தலையிட்டும், தேர்தல் ஆணையன் தன்னோட முடிவில் ஸ்ட்ராங்கான நிலையில இருக்கு. இதற்கு பின்னால் என்ன உள் எதுஎன்றுநீங்கநினைக்கறீங்க? வரக்கூடிய எல்லா தேர்தலையும் மனதுல வைத்துதான் அது ஸ்ட்ராங்கான முடிவ எடுக்கிறோம், எலக்ட்ரல் ரோலர் பியூரிபிகேஷன்க்காக ஒரு வழி என்று சொல்றாங்க?

திராவிட முன்னேற்ற கழகம் எப்போதுமே வாக்காளர் பட்டியல் சிறந்த முறையில் அமைக்கப்பட வேண்டும். உண்மையான வாக்காளர்களைச் சேர்த்திட வேண்டும். போலியான வாக்காளர்களை நீக்க வேண்டும். அது உண்மையான வாக்காளர் பட்டியலாக இருக்க வேண்டும் என்பதில் திராவிட முன்னேற்ற கழகம் எப்போதும் அழுத்தம் திருத்தமாக, தன்னுடைய வாதமாக, தங்களுடைய கோரிக்கையாக வைத்துக் கொண்டே இருக்கின்றது. அது பிரச்சனை இல்லை. இறந்த வாக்காளர்களை நீக்க வேண்டும் என்பதை நாங்களும் கேட்டிருக்கின்றோம். அதேபோல இரட்டை பதிவு வாக்காளர்களை நீக்க வேண்டும். ஆனால்நீக்கப்படுபவர்கள் உண்மையிலேயே இறந்தவர்களாக இருக்கவேண்டும். நேற்று கூட உச்சநீதிமன்றத்தில ஒரு வழக்கறிஞர் பீகாரில் இருந்ததாக நீக்கப்பட்ட இரண்டு வாக்காளர்களை உயிருடன் கொண்டு வந்து உச்சநீதிமன்றத்தில் நிறுத்தினார். அது போன்ற முறைகேடுகள் நடக்க கூடாது என்பது தான் எங்களுடைய நோக்கம்.

**- புலம் பயர்ந்த தொழிலாளர்களை வாக்காளராகத் தமிழகத்துல பெருமளவில சேர்க்கப்பட்டதா? இது தொடர்பாக அனைத்து கட்சி கூட்டத்தை உடனே கூட்டணும் அப்படின்னு சொல்லி கோரிக்கை திமுகா கூட்டணி கட்சிகள் சொல்றாங்க? -**

வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்பது அடிப்படை உரிமை கிடையாது. அது சட்டப்படியான உரிமை. அதற்கு அவர் மூன்று அடிப்படை தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். ஒன்று, இந்திய குடிமகனாக இருக்கவேண்டும். இரண்டு, 18 வயது நிரம்பியவராக இருக்கவேண்டும். மூன்றாவது, அந்த இடத்தில் சாதாரணமாக வசிப்பவராக இருக்க வேண்டும். அதாவது, ஆர்டினரி ரெசிடெண்டாக இருக்கணும். அந்தத் தகுதி உடையவர்களில் யார் வேண்டுமானாலும் இங்கு வாக்காளர் ஆகலாம். ஆனால் யார் ஆர்டினரி ரெசிடென்ட் என்பதில்தான் பிரச்சனை இருக்கின்றது.

ஒவ்வொரு வாக்காளரும், வெளியிலிருந்து வரக்கூடிய ஒவ்வொரு வாக்காளரும் தான் எப்போதுமே இங்கே தான் வசிக்க போகிறேன் என்பதை நிரூபிக்க வேண்டும். அவருடைய குடும்பம் வேறு மாநிலத்திலிருந்து அவர் மூன்று மாதத்திற்கு ஒரு தடவை, நான்கு மாதத்திற்கு ஒரு தடவை இங்கே இருந்து வந்துவிட்டு போகிறவராக இருந்தால், அவர் சாதாரணமாக குடியிருப்பவர் என கருதப்பட மாட்டார். இதான் பிரச்சனை.

**- தமிழ்நாட்டுல என்ன டாக்குமெண்ட்ஸ் கொடுத்தாதான், நீங்க எலக்ட்ரோல்ல சேர்த்தணும்னு என்ன வச்சிருக்கீங்க அல்லது என்ன ஆதாரம் இருக்க வேண்டும்? -**

தேர்தல் ஆணையம் 11 ஆவணங்களை பட்டியலிட்டுருக்கிறது. இந்த 11 ஆவணங்கள் மட்டுமல்லாமல் ஏற்றுக்கொள்ளக்கூடிய மற்ற ஆவணங்களையும் நாங்க பார்ப்போம் என்று சொல்லிருக்கின்றார்கள். அதாவது ஆதார் அட்டையை தவிர மற்ற எல்லாத்தையும் நாங்கள் கணக்கில் எடுத்துக் கொள்வோம் என்று சொல்லிருக்கின்றார்கள். அப்போது இங்கே கொடுக்கக்கூடிய பட்டா போன்ற அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட மற்ற எல்லா அடையாள அட்டைகளையும் எடுத்துக்கலாம்.

**- தேர்தல் ஆணயம் என்பது வந்து தன்னிச்சையான அமைப்பு. இதற்கும் மத்திய அரசுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று தமிழிசை சொல்றாங்க. தேர்தல் ஆணயம் நியாயமாதான் நடக்குது...? -**

முன்பே தேர்தல் ஆணையத்தை பாஜக இந்த கேள்வி கேட்டுள்ளது. காங்கிரஸ் ஆட்சியில் ஈவிஎம் மிஷனை அறிமுகப்படுத்தியபோது, இதே பாஜகதான் தேர்தல் ஆணையம் காங்கிரஸ் உடைய கைப்பாவையாகச் செயல்படுகிறது என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு போட்டார்கள். இப்போது எப்படி மாறிவிட்டது. இவர்கள் மிக மோசமாக தேர்தல் ஆணயத்தை தங்களுடைய கையில் எடுத்துக் கொண்டு, வாக்காளர் பட்டியலில் இவ்வளவு பெரிய மோசடியை செய்து, திரு ராகுல் காந்தி அவர்கள் சொன்னதை போல, கர்நாடக மாநிலத்தில் தொடங்கி மகாராஷ்டிர மாநிலம், ஒரிசா மாநிலம் உள்ளிட்ட எல்லா மாநிலத்திலும் வாக்காளர் பட்டியலை முறையற்ற வகையில் திருத்தங்கள் செய்து, வெற்றி பெற்று கொண்டுள்ளார்கள்.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. பேட்டியளித்தார்.

### உடலுறுப்பு தானத்தில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாடு தேர்வு – ஒன்றிய அரசு விருது!

# மூளைச் சாவு அடைந்த நோயாளிகளைப் பராமரிக்கும் குழுவிற்கான விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஆக.15-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 12.8.2025 அன்று தலைமைச் செயலகத்தில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சந்தித்து, ஒன்றிய அரசின் சுகாதாரத் துறையின் சார்பில் புது தில்லியில் நடைபெற்ற “15-வது இந்திய உறுப்பு தான தினம் 2025” நிகழ்ச்சியில், உடலுறுப்பு தானத்தில் சிறப்பாகச் செயல்பட்டதற்காக தமிழ்நாட்டிற்கு வழங்கப்பட்ட 2024-ஆம் ஆண்டின் இந்தியாவிலேயே சிறந்த மாநிலத்திற்கான தேசிய விருது, சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனைக் குழுவிற்கு வழங்கப்பட்ட மூளைச் சாவு அடைந்த நோயாளிகளைப் பராமரிக்கும் சிறந்த குழுவிற்கான விருது ஆகியவற்றை காண்பித்து வாழ்த்து பெற்றார்.

அதன் விவரம் வருமாறு:

உறுப்புதானம் வழங்குவதில் இந்தியாவிற்கே தமிழ்நாடு ஒரு வழிகாட்டியாக விளங்கி வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2023-ஆம் ஆண்டு செப்டம்பர் 23 அன்று மூளைச்சாவு அடைந்து உறுப்பு தானம் வழங்குபவரின் உடலுக்கு அரசு மரியாதை வழங்கப்படும் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது முதல், இதுவரையில் 479 நபர்கள் உடல் உறுப்பு தானம் செய்து அவர்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு மட்டும் 268 பேர் உடலுறுப்பு தானம் செய்து இந்தியாவிலேயே தமிழ்நாடு ஆயிரக்கணக்கான உயிர்களை காப்பதில் முதன்மையான மாநிலமாக விளங்குகிறது. உடலுறுப்பு தானத்தில் தமிழ்நாடு அரசின் சிறப்பான செயல்பாட்டினை பாராட்டி, ஒன்றிய அரசின் சார்பில் புது தில்லியில் நடைபெற்ற “15-வது இந்திய உறுப்பு தான தினம் 2025” நிகழ்ச்சியில், உடலுறுப்பு தானத்தில் இந்தியாவிலேயே சிறந்த மாநிலமாக தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, 2024-ஆம் ஆண்டிற்கான விருதினை ஒன்றிய சுகாதாரத்துறை அமைச்சர் ஜெ.பி.நட்டா, தமிழ்நாடு உறுப்பு மாற்று ஆணைய உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன் அவர்களிடம் வழங்கினார்.

மேலும், புதுடெல்லியில் நடைபெற்ற அந்நிகழ்ச்சியில், சென்னை மருத்துவக் கல்லூரி மற்றும் சென்னை இராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையின் முன்னாள் முதல்வர் மரு.தேரணிராஜன் தலைமையிலான குழுவிற்கு (மரு. கோமதி கார்மேகம், மரு. ஜெயந்தி மோகனசுந்தரம், மரு. ராகவேந்திரன்) உறுப்பு தானம் மற்றும் உறுப்புமாற்று அறுவை சிகிச்சை துறையில் சிறப்பான பங்களிப்பிற்காக மூளை;ச சாவு அடைந்த நோயாளிகளைப் பராமரிக்கும் சிறந்த குழுவிற்கான விருது வழங்கப்பட்டது.

அவ்விருதினையும் முதலமைச்சர் அவர்களிடம் அமைச்சர் மா.சுப்பிரமணியன் காண்பித்து வாழ்த்துப் பெற்றார்.

இந்நிகழ்வில், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் மரு.சித்ரா, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொறுப்பு) மரு. தேரணிராஜன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### முத்தமிழறிஞர் கலைஞரால் பாராட்டப்பட்ட

# பாவலர் க.மீனாட்சி சுந்தரம் பிறந்த நாளையொட்டி நல உதவிகள்!

## தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றப் பொதுச் செயலாளர் நா.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, ஆக.15-

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் நிறுவனர் ஆசிரியர் இனக் காவலர் பாவலர் க.மீனாட்சி சுந்தரம் அவர்களின் பிறந்தநாள் விழா குறித்து தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் முனைவர் மன்றம்நா.சண்முகநாதன் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் நிறுவனர் ஆசிரியர் இனக் காவலர் பாவலர் அவர்களின் பிறந்த நாளான 15.8.25 அன்று ஆசிரியர் மன்ற மாநில, மாவட்ட, ஒன்றிய பொறுப்பாளர்கள், என் உயிரினும் மேலானஆசிரியர் மன்ற உறவுகள் அனைவரும் மாவட்ட, மாநகர, நகர,ஒன்றிய,சரக மற்றும் வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் பிறந்த நாள் நிகழ்வுகளை நடத்தி புகழ் வணக்கம் செலுத்திடுமாறும் மாணவர்களுக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்

பாவலர் அவர்கள் ஆசிரியர் நலன், மாணவர் நலன், சமுதாய நலனுக்காக அவர் ஆற்றிய பணிகள் தொண்டுகள், செய்த உதவிகள், அவர் ஆற்றிய உரைகள், எழுத்துக்கள், திருவாரூர் மருத்துவக் கல்லூரிக்கு அளித்திட்ட உடல் கொடை போன்றவைகளின் வழியில் ஐயா அவர்கள் உருவாக்கிய இயக்கம் அவர் காட்டிய பாதையில் தடம் மாறாமல் பயணிக்கிறது.நம் ங்களில் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற பாவலர் அவர்கள் தமிழ்நாட்டின் ஒட்டு மொத்த ஆசிரியர் அரசு ஊழியர்களின் வாழ்விலும் நிலைத்து நிற்கிறார்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் வாழ்விலும் தாழ்விலும் ஒரே கொள்கைக்கு சொந்தக்காரர் தம்பி மீனாட்சி சுந்தரம் என்று பாராட்டப்பட்டவர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் துணைப்படை என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப் பட்ட அமைப்பாகும். கொரோனா பேரிடர் காலத்தில் அமைப்பின் சார்பில் நிவாரண நிதியாக ரூபாய் 1,28,10,700 தமிழக முதல்வரிடம் வழங்கியது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்றத்தின் புதுக்கோட்டை மாவட்டக் கிளையின் சார்பில் கல்வி உரிமை மீட்புக் கருத்தரங்கத்தை நடத்தி அவர் காட்டிய பாதையில் தடம் மாறாமல் நம் அமைப்பு பயணிக்கிறது.அவருடைய பிறந்த நாளில் பாவலரின் புகழினை போற்றுவோம் புகழஞ்சலி செலுத்துவோம், ஆசிரியர் மன்றத்தின் பச்சை வண்ணக் கொடிகள் பட்டொளி வீசிப் பறக்க செய்திடுங்கள்!பாவலர் அவர்களின் திருஉருவப் படம் திறப்புச் செய்து மலர் வணக்கம்-புகழ் வணக்கம் செலு த்துங்கள்! பாவலர் அவர்களின் புகழ் பாடுங்கள்! பரப்புங்கள்! போற்றுங்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## தி.மு.க. வர்த்தகர் அணி

# மாவட்ட, மாநில அமைப்பாளர் - தலைவர்கள் கூட்டம்!

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் கூட்டம் 24-8-2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில், கிருஷ்ணகிரி, “தேவராஜ் மகாலில்” எனது தலைமையில் கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி சிவா, எம்.பி., அவர்கள் சிறப்புரையாற்றுகிறார். வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், எஸ்.மோகன் - வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ்.முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர் - வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே. பல்லவிராஜா, வி.எஸ். ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன், கிருஷ்ணகிரி பி.டி.அன்பரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் வர்த்தகர் அணி பட்டியல் பெறுதல் மற்றும் கழக அணி வளர்ச்சி குறித்து.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 13.08.2025

**காசி முத்துமாணிக்கம்,**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி



கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வார்டு எண் : 52, பீளமேடு திருமகள் நகர் பகுதியில் ரூபாய் 42 இலட்சம் மதிப்பீட்டில் புதிய தார்ச்சாலை அமைக்கும் பணியினை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் முன்னிலையில் கிழக்கு மண்டலத் தலைவர் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக் துவக்கி வைத்தார். இதில் உதவிப் பொறியாளர் பெர்மான் அலி, பொதுக்குழு உறுப்பினர் இரா.மணிகண்டன், அண்ணா நகர் பகுதி பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச்செல்வன், 52 வது வட்டக் கழக செயலாளர் கி.நாராயணன், ஆட்டோ சசி, அருள்மிகு.தண்டுமாரியம்மன் திருக்கோவில் அறங்காவலர் ஸ்ரீவத்சன், கோவிந்தராஜ், சுந்தர்ராஜன், எஸ்.ரங்கதுரை, குடை ஆறுமுகம், ஸ்ரீ ஜித், ராஜலட்சுமி உள்பட திருமகள் நகர் நலச் சங்க நிர்வாகிகள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.